RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-55 | 28 பிப்ரவரி | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘தேர்தல் ஆணைய அலுவலகம் முன் காலவரையற்ற போராட்டம் நடத்த தயங்க மாட்டேன்’ மம்தா

கொல்கத்தா, பிப்.28

“மேற்கு வங்க வாக்காளர் பட்டியலில் தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் வெளிமாநில வாக்காளர்களை பாஜக சேர்க்கிறது. இவ்விஷயத்தில் தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் தேர்தல் ஆணைய அலுவலகம் முன் காலவரையற்ற போராட்டம் நடத்த தயங்க மாட்டேன்” என மம்தா பானர்ஜி எச்சரித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற திரிணமூல் காங்கிரஸ் மாநாட்டில் உரையாற்றிய அக்கட்சியின் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, “தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் பாஜக மற்ற மாநிலங்களிலிருந்து போலி வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துள்ளது. இவ்விஷயத்தில் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படா விட்டால் தேர்தல் ஆணையத்தின் அலுவலகம் முன் காலவரையற்ற போராட்டம் நடத்தப்படும்.

தேர்தல் ஆணையத்தில் செல்வாக்கு செலுத்தவே தலைமைத் தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமாரை பாஜக நியமித்துள்ளதா என்ற கேள்வி எழுகிறது. தேர்தல் ஆணையத்தின் ஆசீர்வாதத்துடன் பாஜக வாக்காளர் பட்டியலை எவ்வாறு கையாள்கிறது என்பது மிகவும்



தெளிவாகத் தெரிகிறது.

2006 இல் நிலம் கையகப்படுத்துதல் எதிர்ப்பு இயக்கத்தின் போது நான் 26 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி இருக்கிறேன். அப்படிப்பட்ட என்னால், தேர்தல் ஆணையத்துக்கு எதிராகவும் ஒரு இயக்கத்தைத் தொடங்க முடியும். வாக்காளர் பட்டியலை சரிசெய்து போலி வாக்காளர்களை அகற்றக் கோருவதற்காக தேவைப்பட்டால் தேர்தல் ஆணையத்தின் அலுவலகம் முன் காலவரையற்ற போராட்டத்தில் நான் ஈடுபடுவேன்.

டெல்லி மற்றும் மகாராஷ்டிராவில், ஹரியானா மற்றும் குஜராத்தில் இருந்து போலி வாக்காளர்களைப் பதிவு செய்து பாஜக தேர்தல்களில் வெற்றி பெற்றது. தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்பட்டால் மேற்கு வங்க தேர்தல்களில் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்பதை பாஜக அறிந்திருப்பதால், அக்கட்சி ஹரியானா மற்றும் குஜராத்தில் இருந்து போலி வாக்காளர்களைக் கொண்டு வந்து மேற்கு வங்க தேர்தல்களில் வெற்றிபெற முயற்சிக்கும்.

மேற்கு வங்கத்தின் பல்வேறு மாவட்டங்களில் தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் பிற மாநிலங்களில் இருந்து போலி வாக்காளர்கள் சேர்க்கப்படுவதை உறுதி செய்யப்பட்டுள்ளது. பாஜகவின் உதவியுடன் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட போலி வாக்காளர்களை நாங்கள் அடையாளம் காண்போம். வெளியாட்கள் (பாஜக) மேற்கு வங்கத்தைக் கைப்பற்ற அனுமதிக்க மாட்டோம். பாஜக டெல்லி தேர்தலில் செய்ததை மேற்கு வங்கத்தில் செய்ய முடியாது.

அடுத்த ஆண்டு நடைபெற மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 294 தொகுதிகளில், 215 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவதே நமது இலக்கு. இதன்மூலம், பாஜகவின் வெற்றி வாய்ப்பை நாம் பெருமளவில் குறைக்க வேண்டும்“ என்று தெரிவித்தார். கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் பாஜக 77 இடங்களைப் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

## “இந்தி முகமூடியில் ஒளிந்திருக்கும் சமஸ்கிருத முகம்” முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்

சென்னை, பிப்.28

“சிறப்புமிக்க தமிழ்மொழியை இந்தி மொழியாலோ, இந்தியை முன்னிறுத்தி மறைமுகமாகத் திணிக்க நினைக்கும் சமஸ்கிருதத்தாலோ ஒருபோதும் அழிக்க முடியாது. ஆனால், சில மொழிகள் இந்திக்கு இடம் கொடுத்தன; இருந்த இடம் தெரியாமல் தொலைந்தன. அதனாலேயே நாம் இந்தித் திணிப்பை எதிர்கிறோம்.” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இந்தி என்ற முகமூடிக்கு பின்னால் சமஸ்கிருதத்தின் முகம் இருப்பதாக விமர்சித்து மொழிப் போராட்ட வரலாற்றுப் பின்னணியில் உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மூன்றாவது மடல் என்று குறிப்பிட்டு திமுகவின் அதிகாரபூர்வ இதழில் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தின் விவரம் வருமாறு:

இந்தியைப் படித்தால் தமிழ் அழிந்துவிடும் என்று திமுக பயப்படுகிறதா எனக் கேட்கின்ற ஒரு கூட்டத்தார் இன்று நேற்றல்ல, பெரியார் முன்னெடுத்த 1937 39 மொழிப் போராட்டத்தின் போதும் இருந்தனர். இதே கேள்வியை அப்போதும் கேட்டனர். இந்தி என்பது ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக, சமஸ்கிருதமும் மேலும் சில மொழிகளும் கலந்து திரிபடைந்ததால் உருவான மொழி. தமிழ், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான மொழி. தன்னிலிருந்து திராவிடக் குடும்பத்து மொழிகளைக் கிளைத்திடச் செய்த தாய்மொழி.

கீழடி அகழாய்வுகள் மூலம் ஏறத்தாழ மூவாயிரம்



ஆண்டுகள் பழமையான தமிழ் எழுத்துகளைக் கண்டறிந்திருக்கிறோம். மாங்காடு, மயிலாடும்பாறை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் நடந்த அகழாய்வுகளில் கிடைத்த இரும்புப் பொருட்களை நவீன அறிவியல் தொழில்நுட்பமான கதிரியக்கக் கரிம காலக் கணிப்புகள் மற்றும் தூண்டொளி காலக் கணிப்புகளுக்கு உட்படுத்தியதன் விளைவாக, தமிழர்கள் 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத் திறன் பெற்றிருந்தனர் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

‘கல்தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி’ என்பதற்கிணங்க, சங்க இலக்கியம் காட்டும் குறிப்புகள் பலவும் சான்றுகளுடன் நிரூபிக்கப்படுகின்ற அளவிற்குத் தமிழ் மூத்த மொழியாக செம்மொழியாகத் திகழ்கிறது. சிறப்புமிக்க தமிழ்மொழியை இந்தி மொழியாலோ, இந்தியை முன்னிறுத்தி மறைமுகமாகத் திணிக்க நினைக்கும் சமஸ்கிருதத்தாலோ ஒருபோதும் அழிக்க முடியாது.

மும்மொழித் திட்டம் என்ற பெயரில் என்னென்ன மொழிகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என அட்டவணையைப் பார்த்தால் பெரும்பாலான மாநிலங்களில் இந்தி அல்லது சமஸ்கிருதமே முன்னிலைப்படுத்தப்படுகிறது. தமிழர்கள் வாழும் யூனியன் பிரதேசமான அந்தமான் நிக்கோபர் தீவுகளைத் தவிர வேறெங்கும் தமிழ் மொழி இடம்பெறவில்லை. இதுவும்கூட எத்தனை காலத்திற்கு நீடிக்கும் என்பதை உறுதியாக சொல்ல முடியாது.பாஜக. ஆளும் ராஜஸ்தான் மாநிலத்தில் உருது ஆசிரியர்களுக்குப்பதில் சமஸ்கிருத ஆசிரியர்களை நியமிக்கும் மொழிப் பாசிசம் வெட்டவெளிச்சமாகியுள்ளது. தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டால், வடமாநிலங்களைப் போலத் தாய்மொழியை முற்றிலும் புறக்கணித்து சமஸ்கிருதமயமாக்கும் திட்டம்தான் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படும்.

தேசிய கல்விக் கொள்கை 2020ன் 4.17வது பிரிவு, “இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள செம்மொழியான சமஸ்கிருதம் இலக்கியம், கணிதம், அறிவியல், மருத்துவம், தத்துவம், இசை, அரசியல் இன்ன பிற உள்ளிட்ட பல்வேறு கலைச் செல்வங்களைக் கொண்டுள்ளது, இதனால் சமஸ்கிருத மொழி பள்ளிகளிலும், உயர்கல்வியிலும் அனைத்து நிலைகளிலும் மும்மொழித் திட்டத்தில் ஒன்றாக மாணவர்களுக்கு கற்றுத் தரப்படும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிறகே, மூத்த மொழியான தமிழ் மற்றும் இந்தியாவின் பிற மொழிகள் பற்றி 4.18வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும், சமஸ்கிருதத்துடன் கூடுதலாக (In addition to Sanskrit). தமிழ் உள்ளிட்ட மொழிகளைக் கற்பதற்கு ஆன்லைன் முறையில் வாய்ப்பளிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம், சமஸ்கிருதத்தைத் திணிக்கவும், தமிழ் உள்ளிட்ட மற்ற மொழிகளைப் புறங்கையால் ஓரங்கட்டவும் திட்டமிட்டே ஒன்றிய பாஜக அரசு தேசியக் கல்விக் கொள்கையையும் அதன் வழியாக மும்மொழித் திட்டத்தையும் நம் மீது திணிக்கிறது என்பது தெளிவாகிறது.

தமிழ்ப் பண்பாட்டை அழிக்க நினைத்து, சமஸ்கிருத இந்தி மொழிகள் மூலம் ஆரியப் பண்பாட்டைத் திணிக்க எவர் முயற்சித்தாலும் அதற்கு இந்த மண்ணில் இடம் கிடையாது என்கிற வகையில் அரை நூற்றாண்டுக்கு முன்பே தமிழ்நாட்டில் இருமொழி கொள்கையை சட்டமாக்கினார் அண்ணா. அந்த வரலாற்றுப் பக்கத்தைப் புரட்டினால்தான் இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களின் வஞ்சகத்தை இளையதலைமுறை புரிந்துகொள்ள முடியும்.

இவ்வாறு முதல்வர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## குமரி, நெல்லை உள்ளிட்ட 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, பிப்.28

கன்னியாகுமரி, திருநெல்வேலி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் பிப்.,28 ஆம் தேதி (நாளை) கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, பிப்.,27 ஆம் தேதி கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

பிப்., 28 ஆம் தேதி கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், ராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மார்ச் 1 ஆம் தேதி தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மார்ச் 2 ஆம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மார்ச் 3 ஆம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மார்ச் 4, 5 ஆம் தேதிகளில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும்.

அடுத்த ஐந்து தினங்களுக்கான அதிகபட்ச வெப்பநிலை பற்றிய முன்னறிவிப்பு: 24 மணி நேர அதிகபட்ச வெப்பநிலை மாறுதல்: பிப்., 27 ஆம் தேதி முதல் மார்ச் 3 ஆம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு. அதிகபட்ச வெப்பநிலை சற்றே குறையக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ஆஜராக முடியாது.. போலீசாருக்கு சீமான் சவால்!

சென்னை, பிப்.28

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றியதாக நடிகை விஜயலட்சுமி கடந்த 2011 ஆம் ஆண்டு புகார் அளித்தார். தொடர்ந்து கடந்த ஆண்டும் சென்னை வளசரவாக்கம் காவல்நிலையம் மற்றும் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.

அதன் பிறகு இந்த வழக்கை விஜயலட்சுமி வாபஸ் பெற்ற விஜயலட்சுமி, சீமானுக்கு அரசியல் அதிகாரம் உள்ளதால் தனது வழக்கின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால் வழக்கை திரும்ப பெறுவதாக தெரிவித்தார். இந்நிலையில் விஜயலட்சுமி தொடர்பான வழக்கை ரத்து செய்ய கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் சீமான் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் சீமான் மனுவை தள்ளுபடி செய்ததோடு இந்த வழக்கு தொடர்பாக விசாரணை



நடத்தி 12 வாரத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது. இதையடுத்து இந்த வழக்கில் இன்று விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு சீமானுக்கு வளசரவாக்கம் காவல்துறையினர் ஏற்கனவே சம்மன் அனுப்பி இருந்தனர்.

ஆனால் சீமான் ஆஜராகவில்லை. அவருக்கு பதிலாக அவரது வழக்கறிஞர்கள் ஆஜராகி விளக்கம் அளித்தனர். இதையடுத்து நாளை காலை 11 மணிக்கு சென்னை வளசரவாக்கம் காவல் நிலையத்தில் சீமான் ஆஜராக வேண்டும் என கூறி இன்று மீண்டும் போலீசார் சமன் அனுப்பினர். அந்த அம்மனை காவல்துறையினர் அவரது வீட்டில் ஒட்டினர். ஒட்டிய சில நிமிடங்கள் இடையே அந்த சம்மன் கிழிக்கப்பட்டது.

இதுதொடர்பாக விசாரிக்க சென்ற காவல்துறையினர் மீது சீமான் வீட்டு காவலாளி தாக்குதல் நடத்தினார். இதையடுத்து அவரை கைது செய்த போலீசார் சம்மனை கிழித்த நபரையும் கைது செய்துள்ளனர். இந்த சம்மனை தான்தான் கிழிக்க சொன்னதாக கூறிய சீமானின் மனைவி அதற்காக காவல்துறையினரிடம் மன்னிப்பு கோரினார்.

இந்நிலையில் ஒசூரில் செய்தியாளர்களை சந்தித்தார் சீமான். அப்போது இந்த சம்பவம் தொடர்பாக செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த சீமான், இது காவல்துறையினரின் கேவலமான நடவடிக்கை. என்னை அசிங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக இது போன்று செய்கிறார்கள். இதனால் இந்த ஆட்சியும் ஆட்சியாளர்களும் தான் அசிங்கப்படுகிறார்கள்.

என் வழக்கில் இவ்வளவு தீவிரம் காட்டும் தமிழக காவல்துறையினர் அண்ணா பல்கலைக்கழக விவகாரம் மற்றும் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் இந்த தீவிரத்தை ஏன் காட்டவில்லை? நாள்தோறும் செய்தியாளர்களை சந்தித்து வருகிறேன். என்னை இப்படி விரட்ட வேண்டிய அவசியம் இல்லை. எத்தனையோ பிரச்சனைகள் இருக்கும் நிலையில் கிருஷ்ணகிரியில் வேலையாக இருக்கும்போது வீட்டில் எதற்காக ஒட்ட வேண்டும்? நாளை ஆஜராக முடியாது, என்ன செய்வீர்கள்?

நான் வருகிறேன் என்று சொன்ன பிறகும் எதற்காக வீட்டில் ஒட்ட வேண்டும்? இதெல்லாம் தேவையில்லாத வேலை. நாளைக்கு வர முடியாது என்றால் என்ன செய்வீர்கள்? சம்பந்தப்பட்ட அந்த பெண்ணையும் அழைத்து விசாரணை நடத்த வேண்டும். இதன் மூலம் மக்களுக்கு இந்த அரசு என்ன சொல்ல விரும்புகிறது. விசாரிக்கவே இல்லை, இப்படித்தான் நடந்துள்ளது என நீங்களே முடிவு செய்துள்ளீர்கள். என்னை என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறீர்கள்? எதுவும் செய்ய முடியாது.

## கடலூரில் (போலி அர்ச்சகர்) மீது இந்து சமய அறநிலைத்துறை நடவடிக்கை எடுக்குமா?

கடலூர் பிப்28

கடலூர் மாவட்டம் தென்னம்பாக்கம் கிராமத்தில் உலகப் புகழ்பெற்ற ஸ்ரீ அழகர் சித்தர் வகையறா திருக்கோவிலில் இங்கு உள்ளது . அங்கு காட்சியளிக்கும் சிவபெருமான் சன்னதியில் ஒரு மாற்றுத்திறனாளி வாய் பேச முடியாத பெண் ஒருவர் பக்தர்களுக்கு விபூதி குங்குமம் கொடுத்துள்ளார். அங்கு பூசாரியாக பணி புரிய வேண்டிய ராஜன் என்பவர் தன் சொந்த வேலை காரணமாக தன் இல்லத்தில் பணிபுரியும் மாற்றுத்திறனாளி பெண்ணை பூசாரியாக அவர் நியமித்துக் சென்று இருக்கிறார் ராஜன் என்பவரோ தற்காலிக பூசாரி தான். ஆனால் அவர் தன் வீட்டில் பணிபுரியும் பெண்ணை அவருக்கு பதிலாக பூசாரியாக நியமித்து சென்றிருக்கிறார். புனிதத்தை கெடுக்கும் வகையில் உள்ளதாக பக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவை அனைத்தும் திருக்கோவில் வளாகத்தில் உள்ள கண்காணிப்பு கேமராவில்(cctv)





பதிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்து கோவில் என்பதால் இந்த அலட்சியமா அல்லது இவை அனைத்தும் அதிகாரிக்கு தெரிந்தே நடக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது? இல்லை உலகப் புகழ்பெற்ற ஸ்ரீ அழகர் சித்தர் கோவிலின் மாண்பை கெடுக்க அர்ச்சகர்கள் போடும் கணக்கா. இந்து சமய அறநிலைத்துறை என்றுதான் விழித்துக் கொள்ளுமோ!

இதற்கு உடந்தை யாக இருக்கும் அர்ச்சகர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? இவர் மீது இந்து சமய அறநிலைத்துறை கடலூர் இணை ஆணையர் பரணிதரன் நடவடிக்கை எடுப்பாரா?

## தெலங்கானா சுரங்க இடிபாடு விபத்து 6வேது நாளாக தொடரும் மீட்புப் பணிகள்

நாகர்னூல், பிப்.28

ஸ்ரீசைலம் இடதுகரைக் கால்வாய் சுரங்கப்பாதையில் ஏற்பட்ட இடிபாடுகளில் சிக்கியிருக்கும் 8 பணியாளர்களை மீட்கும் பணிகள் 6வது நாளாக நீடித்து வருகிறது.

இந்நிலையில் உள்ளே சிக்கியிருப்பவர்கள் இருக்கும் பகுதிக்குச் செல்ல தடையாக இருக்கும் இடிபாடுகளை அகற்றும் பணிகளில் துளைபோடும் இயந்திரங்கள் ஈடுபட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து நாகர்னூல் காவல் கண்காணிப்பாளர் வைபவ் கெய்க்வாட் கூறுகையில், “கேஸ் கட்டிங் இயந்திரம் ஏற்கனவே சுரங்கத்துக்குள் அனுப்பப்பட்டுவிட்டது. இரவில் அவர்கள் துளையிடும் பணிகளை மேற்கொண்டனர். நேற்றிரவே பணிகள் தொடங்கி விட்டன. உள்ளே சிக்கியிருப்பவர்களை இன்று சென்றடைய முடியுமா என்று நான் கூற முடியாது.” என்றார்.

முன்னதாக தெலங்கானா அமைச்சர் உத்தம் குமார் ரெட்டி நேற்று கூறுகையில், “சுரங்கத்துக்குள் விழுந்திருக்கும் இடிபாடுகள் கேஸ் கட்டிங் இயந்திரத்தின் மூலம் உடைக்கப்பட்டு அகற்றப்படும். பின்பு ராணுவத்தினர், கடற்படை, எலி வலை சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் உள்ளே சிக்கி இருப்பவர்களை மீட்க வேறு முக்கியமான முயற்சிகளை மேற்கொள்வார்கள்.” என்று தெரிவித்திருந்தார். இதனிடையே, ஸ்ரீசைலம் சுரங்கப்பாதை கட்டுமான பணியினை மேற்கொண்டு வரும் Jaypee குழுமத்தின் நிறுவனத் தலைவர் ஜெய்பிரகாஷ் கவுர் நேற்று கூறுகையில், “இதுபோன்ற கடினமான பணிகளை மேற்கொள்ளும் போது விபத்துக்கள் நடக்கவே செய்யும். உள்ளே சிக்கியிருப்பவர்களை பத்திரமாக வெளியே கொண்டு வர மீட்புக்குழுவினர் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்துவருகின்றனர்.” என்றார்.

# மானாமதுரை அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாத நிலையில் கூடுதல் மருத்துவக் கட்டிட பணிகள்! பொதுமக்கள் குழப்பம் ?






மானாமதுரை பிப்.28

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு மருத்துவமனையில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக டாக்டர்கள் இல்லாத நிலையில் குறிப்பாக இரவு நேரத்தில் டாக்டர்கள் இல்லாத நிலையில் பல்வேறு கட்சிகள் போராட்டம் நடத்தியும் இதுவரை டாக்டர்கள் பணி அமர்த்தப்படவில்லை இந்த நிலையில் 15 வது நிதி குழு மாநில சுகாதார திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனை வளாகத்தில் கூடுதல் மருத்துவ கட்டிடப் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. பொதுமக்களின் அத்தியாவசியமான குடிநீர்,சாலை வசதி, மருந்துவம் , மின்சாரம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தராமலும் கொடுக்கப்படும் மனுக்கள் மீதும் முறையான நடவடிக்கை இல்லாததாலும் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். பொதுமக்களின் பூர்த்திகளை நிரப்பாமல் எதிர்வரும் காலங்களில் கட்சியின் தலைவர்களின் பெயர்களை கல்வெட்டில் பொறிக்கப்படுவதற்கும் உள்ளது மேலும் இரண்டாம் மன்னன் புலிகேசி திரைப்படத்தில் இடம்பெற்ற வரலாறு மிக முக்கியம் அமைச்சரே ! என்ற வடிவேலு பட காமெடியில் வரும் வசனம் போல் தெரிகிறது. பொதுமக்களிடம் வரி பெற்றுக்கொண்டு அதை முறையாக பொதுமக்களுக்கு செலவிடாமல் அனாவசியமான கட்டிடம் கட்டுவதற்கும் தொட்டி கட்டுவதற்கும் அதற்கும்? இதற்கும்? வீண் செலவு செய்கின்றனர் என்று பொதுமக்கள் குமுறுகின்றனர். இந்த கட்டிட விழாவிற்கு பின்னராவது அரசு மருத்துவமனையில் இரவு நேர மருத்துவர் நியமிக்கப்படுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது...



சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,திமுக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி மு க ஸ்டாலின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை சிறப்பான முறையில் கொண்டாடுவது மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் மாநகர திமுக பிரமுகர் இல்ல திருமண விழாவில் அமைச்சர் வாழ்த்து

செங்கல்பட்டு, பிப்.28

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் 32 வது வட்ட இளைஞர் அணி கே.கே.கார்த்திக் தீபா திருமண விழாவில் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் கழக தீர்மானக் குழு உறுப்பினர் மீ.அ.வைத்தியலிங்கம், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், கழக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் தெற்கு பகுதி கழக துணை செயலாளர் வ.க ரவி, முன்னாள் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர், பா.குறிஞ்சி சிவா, மாவட்ட



மருத்துவர் அணி தலைவர் டாக்டர் கிருத்திகாதேவி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விக்கி (எ) ஏ.விக்னேஸ்வரன், தாம்பரம் நகர முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.தேவராஜ், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் இ.நடராஜ், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் இன்ஜினியர் ம.ராமமூர்த்தி, மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைத் தலைவர் என்.ஷாஜகான் மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் கல்யாணி மண்டராஜ், மாநகர சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் பேராசிரியர் அ.ரெனால்ட் ரெசாரியோ, மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.ஜெகநாதன், 50வது வட்ட கழக செயலாளர் ஜீவன், 54வது வட்டக் கழக செயலாளர் குருநாதன், பெருங்களத்தூர் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள், வெ.கார்த்திக் ராஜ், ஜே.நரேஷ்குமார், தாம்பரம் மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் பிரபா பாஸ்கர்,

பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மணிகண்டன், இளைஞரணி சகோதரர் எஸ் எம் ரிஸ்வான், ஜே.பிரேம், சி.பன்னீர்செல்வம், கோ.ராஜன், எஸ்.பாலசுப்பிரமணியம், வசந்த் மணிகண்டன், உள்ளிட்ட கழகத் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# எலி மருந்து விற்பனை விதிமீறல்களில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிகை! மதுரை ஆட்சியர் எச்சரிக்கை

மதுரை: பிப் 28

மதுரை மாவட்டத்தில் உள்ள பூச்சி மருந்து விற்பனை நிலையங்கள், மளிகை கடைகளில் தடை செய்யப்பட்ட எலி கொல்லி மருந்துகள் விற்பனை செய்யப்படுகிறதா என வேளாண்மை அதிகாரிகள், தோட்டக்கலை அதிகாரிகள் ஒன்றிணைந்து தங்கள் வட்டாரங்களில் உள்ள பூச்சிக் கொல்லி மருந்து விற்பனை நிலையங்கள், மளிகை கடைகள், சிறிய அளவிலான பெட்டி கடைகள் என 67 இடங்களில் தீடீராய்வு மேற்கொண்டனர்.







ஆய்வின் போது மளிகை கடைகளில் 1968 பூச்சிமருந்து சட்டத்திற்கு உட்படாத, தடை செய்யப்பட்ட எலி மருந்து (3% மஞ்சள் பாஸ்பரஸ்), வீட்டு உபயோகத்திற்கான இனத்தில் வராத ப்ரோமோடையலான், அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமுள்ள ஜிங் பாஸ்பைடு (2%) ஆகிய மருந்துகள் விற்பனை செய்தது கண்டறியப்பட்டு (9.1 கிலோ) பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், எலி கொல்லி மருந்துகளை விற்பனை செய்ய மத்திய பூச்சிக் கொல்லி வாரியத்தில் (Central Insecticide Board) பதிவு செய்யப்பட்டு அதன் விபர படி உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு உரிமம் அவசியம். இருப்பினும் மளிகை கடைகள், மற்றும் பெட்டி கடைகளில் வீட்டு உபயோகத்திற்கு என்று குறிப்பிட்டுள்ள அளவுகளில் எலி மருந்துகளை விற்பனை செய்யலாம். அவ்வாறு விற்பனை செய்யப்படும் எலி மருந்துகள் 1968 பூச்சி மருந்து சட்டத்திற்குட்பட்டும். உரிய முறையில் பேக்கிங் செய்யப்பட்டு, வீட்டு உபயோகத்திற்கு என்ற Label (Household Insecticide) பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

பொதுமக்கள் வீடுகளில் எலிகளை கட்டுப்படுத்திட பூச்சிக் கொல்லி மருந்து விற்பனை நிலையங்கள் மற்றும் மளிகை கடைகள், பெட்டி கடைகளில் அனுமதிக்கப்பட்ட (1% ஜிங் பாஸ்பைடு) அளவிலான மருந்துகளா என்பதை கவனித்து வாங்கி உபயோகிக்க வேண்டும்.

எலி மருந்து விற்பனை தொடர்பாக தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் எனவும், விதிமீறல்களில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது 1968 பூச்சி மருந்து சட்டத்தின்படி கடும் நடவடிகை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள எண் வழங்க தரவுகள் பதிவு செய்யும் பணிகளை ஆய்வு செய்த மதுரை ஆட்சியர்

மதுரை, பிப்.28

மதுரை மாவட்டம் செய்தியாளர் சுற்றுப் பயணம் அரசின் திட்டங்களை எளிதில் பெற்று பயனடைய ஏதுவாக விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள எண் வழங்குவதற்காக அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடைபெற்ற விவசாயிகள் தரவுகள் பதிவு செய்யும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள. சங்கீதா, நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

மதுரை மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள எண் வழங்குவதற்காக அனைத்து வருவாய் கிராமங்களிலும் விவசாயிகள் தரவுகள் பதிவு செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள. சங்கீதா, செய்தியாளர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நேரில் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள. சங்கீதா, தெரிவித்ததாவது:



தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில், விவசாயிகளுக்கு தனித்துவ அடையாள எண் வழங்குவதற்காக அனைத்து வருவாய் கிராமங்களிலும் விவசாயிகள் தரவுகள் பதிவு செய்திட வேண்டுமென மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இதற்காக, மதுரை மாவட்டத்தில் அனைத்து வருவாய் கிராமங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

விவசாயிகள் தங்களுடைய ஆதார் அட்டை, நில உடைமை பட்டா, ஆதாருடன் இணைக்கப்பட்ட செல்போன் ஆகியவற்றை எடுத்து சென்று அவர்களிடம் பதிவு செய்து கொண்டு அடையாள எண் பெற்றுக்கொள்ள வேண்டும். நில விவரங்களை இணைப்பதன் மூலம் அனைத்துத்துறை திட்டங்களையும் எளிதில் பெறலாம். ஒவ்வொரு முறையும் விண்ணப்பிக்கும் போது ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. அரசு நல திட்டங்கள் சரியான பயனாளிக்கு சென்றடைவதையும் இதன் மூலம் உறுதிப்படுத்த முடியும். பிரதமரின் கவுரவ நிதி திட்டம் மற்றும் பயிர் காப்பீடு போன்ற இதர மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்கள் அனைத்தும் இத்தரவுகளின் அடிப்படையில் வழங்கப்படும். எனவே, விவசாயிகள் தாமதமின்றி தங்கள் கிராமத்திற்கு வரும் அலுவலர்களிடம் தாங்கள் குறித்த நில விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் இதுவரை 586 வருவாய் கிராமங்களில் 24,123 விவசாயிகளுக்கு அடையாள எண் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பி.எம் கிசான் திட்டத்தின் கீழ் பதிவு செய்த 1,42,718 விவசாயிகள் அனைவருக்கும் நில உடைமை தரவுகள் பதிவேற்றம் செய்து அடையாள எண் வழங்கிட தொடர்ந்து முகாம்கள் நடைபெறும். எனவே, மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் தங்கள் நில விவரங்களை பதிவு செய்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, தெரிவித்தார்.

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கான பணி ஆய்வுக் கூட்டம்



தூத்துக்குடி, பிப்.28

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கான மாதாந்திர பணி ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது.

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மற்றும் இளையான்குடி சிட்டி லயன்ஸ் கிளப், ஆயிர வைசிய சபை, இளையான்குடி தன்னார்வலர்கள் இணைந்து நடத்திய ரத்த தான முகாம் இளையான்குடி ஆயிர வைசிய சபை திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இளையான்குடி வட்டாட்சியர் முருகன் துவக்கி வைத்தார்.

முன்னிலை லயன்ஸ் கிளப் நிர்வாகிகள். தலைவர் லயன் செல்வராஜ், செயலாளர் லயன் மீரா உசேன், பொருளாளர் லயன் ஷேக் உதுமான், நிர்வாக அலுவலர் லயன் சாகுல் ஹமீது, லயன் கோபி,லயன் டாக்டர் ஆபிதீன் மற்றும் தன்னார்வலர்கள் தோழர் அப்துல் மாலிக், தோழர் ராஜு, தோழர் இன்னாசி ராஜா, மற்றும் ஆயிர வைசிய சபை தலைவர் சதாசிவம், அம்மன் கோவில் அறங்காவலர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் மற்றும் மரக்கன்றுகள் மஞ்சப்பையில் விநியோகம் செய்யப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை தன்னார்வலர் தோழர் அப்துல் மாலிக் செய்திருந்தார்..

# மண்ணிவாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சி.எஸ்.ஆர் நிதியில் கோனே மற்றும் பூமி பவுண்டேஷன் சார்பில் கட்டிட திறப்பு விழா

மண்ணிவாக்கம் பிப் 28

மண்ணிவாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சி.எஸ்.ஆர் நிதியில் கோனே மற்றும் பூமி பவுண்டேஷன் சார்பில் கட்டிட திறப்பு விழா நடைபெற்றது..

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட மண்ணிவாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் புதிய கட்டிட திறப்பு விழா மண்ணிவாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் சரஸ்வதி தலைமையில் மற்றும் மண்ணிவாக்கம் ஊராட்சி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சி.எஸ்.ஆர் நிதியில் கோனே மற்றும் பூமி பவுண்டேஷன் இணைந்து கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தை கோனே நிறுவனத்தின் பணிபுரியும் எம்.பி.சரவணன்,




சி.வி.எஸ்.கிருஷ்ணகுமார், டேவிட்சன் பால் ரீபிள்ஸ், சிவராமன் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பூமி நிறுவனத்தின் பணி புரியும் விவேக் அகர்வால், ஸ்ரீராம், பிரின்ஸ், சசிகுமார், ராஜேஷ், கண்ணன், கமலேஸ்வரி, பாரதி, சந்தோஷ், என்.எஸ்.என்.ஓ.பி.ஏமந்த், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன், மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம், துணைத் தலைவர் சுமதி லோகநாதன், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ். கார்த்திக், பெற்றோர் ஆசிரியர் தலைவர் ஏ.லோகநாதன், வார்டு உறுப்பினர்கள் விமல், புண்ணியகோட்டி, சுரேஷ், அண்ணாதுரை, குமார், உள்ளிட்ட ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா . முன்னிலையில் இயல்பு மக்கள் குறைத்தீர்க்கும் முகாம் நடைப்பெற்றது. அதிகாரிகளிடம் கடந்த காலத்தில் பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி கேட்டறிந்து கால தாமதமின்றி மக்கள் கோரிக்கைகள் நிறைவேற்றபட வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.




லூர்து நகர் ”நலம் நாடும் நண்பர்கள் சங்கம்” சார்பாக மதுரை கோ.புதூர் அல்அமீன் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் கோசாகுளம் கண்மாய்க்கரை சுத்தம் செய்யும் பணி மற்றும் சுகாதார விழிப்புணர்வு பேரணியும் நடத்தினர். இந்நிகழ்வில் மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் வாசுகி சசிகுமார் தலைமை வகித்தார். அல்அமீன் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் ஷேக் நபி, 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் இராதா மணிமாறன், வார்டு செயலாளர் மருது, லூர்து நகர் நலம் நாடும் நண்பர்கள் சங்க நிர்வாகிகள் பழனிச்சாமி, மன்சூர், வேலுதாஸ், புதூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அனிதா, மதுரை மாநகராட்சி மண்டல துணை ஆய்வாளர், மாநகராட்சி அலுவலர்கள், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் செய்யது முகமது யூசுப் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள குரூப்4-விஏஓ தேர்விற்கென இலவச தேர்வு பயிற்சி

சிவகங்கை பிப்28

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள Group IV/ VAO தேர்விற்கென, சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக TNPSC, TNUSRB, மற்றும் TRB போன்ற தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சிவகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

இத்தன்னார்வபயிலும்வட்டம் மூலம் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் ஆண்டுதோறும் 500 ற்கும் மேற்பட்ட



மாணவ/மாணவியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர். மேலும், இப்பயிற்சி வகுப்புகளின் மூலம், அதிக அளவிலான மாணவ/ மாணவியர்கள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பல்வேறு அரசுத் துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

தற்போது, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள ஆண்டுத்திட்ட அட்டவனையில் TNPSC Group IV/VAO தேர்விற்கு அறிவிக்கை வருகின்ற 25.04.2025 அன்று வெளியிடப்படவுள்ளது எனவும், அதற்கான தேர்வு வருகின்ற 13.07.2025 அன்று நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, TNPSC Group IV/ VAO தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் கடந்த 02.01.2025 முதல் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சி, வகுப்புகளில் அதிகளவிலான பாடவாரியான பயிற்சித் தேர்வுகளும் மற்றும் மாநில அளவிலான பொது மாதிரித்தேர்வுகளும் நடத்தப்படவுள்ளது.

மேலும், இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் https://tinyurl.com/tnpscgroup4coachingsvg என்ற google form-ல் தங்கள் சுய விவரங்களை பூர்த்தி செய்தோ அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வருகை புரிந்தோ பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத் தன்னார்வ பயிலும் வட்ட நூலகத்தில், இத்தேர்வுக்கான புத்தகங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இத்துறையின் www.tamilnaducareerservices.tn.gov.in என்ற மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் அனைத்துப் போட்டித்தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகள் மற்றும் முந்தைய வருட வினாத்தாள்கள் ஆகியவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த மெய்நிகர் கற்றல் இணையதளத்தையும் வேலைநாடும் இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எனவே, இப்பயிற்சி வகுப்புகளில் அதிக அளவிலான மாணவ/மாணவியர்கள் கலந்துகொண்டு தேர்வுகளில் வெற்றி பெற்று, அரசு வேலைவாய்ப்பினை பெற்று பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 44வது வார்டுக்குட்பட்ட பொன்னப்ப நாடார் காலணி மெயின் தெரு குழந்தை இயேசு ஆலயம் அருகில் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ். துவங்கி வைத்த பின்இந்த வார்டில் மேலும் துவங்க படவுள்ள சாலைகளின் பணிகளை ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனையும் வழங்கினார். உடன் மாமன்ற உறுப்பினர் .நவீன்குமார் பகுதி செயலாளர் ஜீவா வட்ட செயலாளர் . துரைசாமி சுகாதார அலுவலர் .முருகன் மற்றும் திமுக நிர்வாகிகள் ஊர்நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலரிடம் முன்மொழிவிற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிப்பு

சிவகங்கை பிப்28

சிவகங்கை மாவட்டம்மினி பேருந்துக்கான புதிய விரிவான திட்டம் 2024 மற்றும் மோட்டர் வாகன சட்டத்தின் கீழ் மினி பேருந்தின் கட்டண திருத்தம் வாகன சட்டத்தின் படி, அடையாளப்படுத்தப்பட்டுள்ள 42 வழித்தடங்கள் தவிர, மாவட்டத்தில் போதிய போக்குவரத்து சேவைகள் இல்லாத பகுதிகள் இருக்கும் பட்சத்தில், உரிய ஆவணங்களுடன் சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலரிடம் முன்மொழிவிற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் வருகின்ற 10.03.2025 வரை நீட்டிப்பு செய்யப் பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தகவல் தெரிவித்துள்ளார்.

மினி பேருந்துக்கான புதிய விரிவான திட்டம் 2024 மற்றும் மோட்டர் வாகன சட்டத்தின் கீழ், மினி பேருந்தின் கட்டண திருத்தம் வாகன சட்டம் 1988 G.O.Ms. No.33, நாள் 23.01.2025ன் படி பொதுமக்களின் நலன் கருதி, நூறு அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட குடும்பங்களை உள்ளடக்கிய



கிராமங்கள்/ குக்கிராமங்கள் / குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு போதுமான, பொருளாதார சிக்கமான, ஒழுங்கான மற்றும் ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து சேவையை அரசு வழங்குவதற்காகவும் மற்றும் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளையும் இணைத்து அருகில் உள்ள பேருந்து நிலையம் அல்லது அருகிலுள்ள நகரத்தை அடைய போதுமான பேருந்து சேவைகள் வழங்குவதை உறுதி செய்யும் நோக்கிலும் தமிழக அரசால் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் புதிய விரிவான திட்டத்தினை அமல்படுத்தும் நோக்கில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஜிழிஷிஜிசி பொது மேலாளர் சிவகங்கை, இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (மதுரை மண்டலம்), சிவகங்கை கோட்டப் பொறியாளர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆகியோரை உறுப்பினர்களாக உள்ளடக்கிய குழு அமைக்கப் பட்டது.


இக்குழு ஆய்வின் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் போதிய போக்குவரத்து சேவைகள் இல்லாத பகுதிகளாக 42 வழித்தடங்கள் அடையாளப் படுத்தப்பட்டு, மாவட்ட அரசிதழ் பதிவு எண்.02 மற்றும் 03 நாள்:12.02.2025,17.02.2025 ன் படி சிறப்பு வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் போதிய போக்குவரத்து சேவைகள் இல்லாத பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட 42 வழித்தடங்கள் தவிர, மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தின் நிபந்தனைக்கு உட்பட்டு முன்மொழியப்படும் வழித்தடங்களிலும் சிற்றுந்துகளை இயக்க விரும்பும் புதிய அனுமதிச்சீட்டு விண்ணப்பதாரர்கள் (Fresh Permit applicant) SCPA படிவத்தில் ரூ.1,600/ கட்டணம் செலுத்தி செல்வநிலைச்சான்று, முகவரிச் சான்று, கால அட்டவணை, வழித்தட வரைபட விவரத்துடன் தகுதி வாய்ந்த சாலைக்கான சான்றிதழை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அல்லது கோட்டப் பொறியாளர் அவர்களிடம் பெற்றும், மேலும் நடப்பு அனுமதிச்சீட்டுதாரர்கள் புதிய விரிவான திட்டம், 2024ன் கீழ் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நிலையில் திட்ட மாறுதலுக்கான (Migration applications) சம்மதம் தெரிவித்து, உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பித்ததுடன், நடப்பு அனுமதிச் சீட்டினை சரண் செய்வதற்கான கட்டணமாக ரூ.140/ செலுத்தி ACC படிவத்துடன், SCPA படிவத்தில் ரூ.1,600/கட்டணம் செலுத்தி திருத்தியமைக்கப்பட்ட வழித்தட வரைபட விவரத்துடன் சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலரிடம் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் வருகின்ற 10.03.2025 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# குன்னூர் தேயிலை ஏல மையங்களில் ரூ.20.08 கோடி வருமானம் கிடைத்துள்ளது

குன்னூர், பிப்.28

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தேயிலை தூள்கள் குன்னூரில் உள்ள ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான எட்டாவது ஏலத்திற்கு 13.12 லட்சம் கிலோ இலை ரகமும், 3.69 லட்சம் கிலோ டஸ்ட் ரகம் என மொத்தம் 16.81 லட்சம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது. இதில் 11.77 லட்சம் கிலோ இலை ரகம்,3.55 லட்சம் கிலோ டஸ்ட் ரகம் என மொத்தம் 15 புள்ளி 32 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனையானது. இந்த ஏலத்தில் தேயிலை தூள் சராசரியாக கிலோ ஒன்று இருக்கு ரூ.119.94 விலை கிடைத்தது.இது கடந்த வார்த்து விட ரூபாய் இரண்டு விலை குறைவு ஆகும்.இந்த



ஏலத்தில் மொத்த வருமானம் 16. இந்த இடத்தில் மொத்த வருமானம் 18.83 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. இதேபோல் நீலகிரி கூட்டுறவு தொழிற்சாலைகள் உற்பத்தி தேயிலை தூள்கள் டீ சர்வ் ஏல மையத்தில் 1.08 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது.இதில் 1.04லட்சம் கிலோ விற்பனையானது. சராசரி விலையாக கிலோ ஒன்றுக்கு ரூபாய் 119.90 பைசாகிடைத்தது. இதன் மூலம் மொத்த வருமானம் ரூ.1.25 கோடி என இரண்டு ஏல மையங்களையும் சேர்த்து மொத்தம் 20.08 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது...



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 15 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களைதிறந்து வைத்தார். மதுரை அரசு இராசாசி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற நிகழ்வில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் குத்துவிளக்கேற்றி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி,புதூர் பூமிநாதன்,நலப் பணிகள் இணை இயக்குநர் செல்வராஜ், மருத்துவமனை முதல்வர் அருள் சுந்தரேசு குமார், மாநகராட்சி மண்டல தலைவர் முகேஷ் சர்மா மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# பாலிமர் இன்ஜினியரிங் துறை சார்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு பல்வேறு கல்லூரியை சேர்ந்த நூற்றுகணக்கான மாணவர்கள் பங்கேற்பு

வண்டலூர் பிப்.28

சென்னை வண்டலூரில் உள்ள பி.எஸ். அப்துல்ரஹ்மான் கிரசண்ட் பல்கலைகழகத்தில் பாலிமர் பொறியாளர்கள் சங்கம் மற்றும் கிரசண்ட் பாலிமர் இன்ஜினியரிங் துறை சார்பில் மேக்ரான் 2025 தேசிய அளவிலான தொழில்நுட்ப சிம்போசியம் நடைப்பெற்றது. நிகழ்ச்சிக்கு கிரசண்ட் பல்கலைகழக பதிவாளர் டாக்டர் ராஜா உசேன் தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக ஷிபௌரா மெஷின் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எம்.குமார் கலந்து கொண்டு, பாலிமர் துறையின் வளர்ச்சி குறித்தும், பாலிமர் என்ஜினியரிங் படிக்கும் மாணவர்களுக்கு பல்வேறு நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்பு குறித்து எடுத்துரைத்தார்.




அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஷிபௌரா மெஷின் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எம்.குமார் கூறுகையில், இன்று எந்த பொருட்களை எடுத்தாலும் பிளாஸ்டிக், பாலிமர் இல்லாத பொருட்களை காணமுடியாது. எந்த பொருட்களை தயாரிக்க வேண்டும் என்றாலும் பாலிமர் தேவை எனவே எதிர்காலத்தில் பாலிமர் துறைக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. மேலும் ஏ.ஐ.தொழில் நுட்பம் மூலமும் அபார வளர்ச்சி அடையும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைகழகச் சார்பு துணைவேந்தர் டாக்டர். என்.தாஜுதீன், டீன் டாக்டர். எச்.சித்தி ஜெய்லானி, பல்கலைகழக சேர்க்கை இயக்குனர் டாக்டர் அப்துல் மஜித், கிரசண்ட் பாலிமர் என்ஜினியரிங் துறைத் தலைவர் டாக்டர். சம்சாத் பேகம், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர். பசந்த குமார் பெகேரா, மாணவர் பிரதிநிதிகள் ப்ருத்வி, அனீஷ் மற்றும் கிரசண்ட் கல்லூரி பாலிமர் துறை மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், பேராசியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை நகராட்சி கூட்டத்தில் அஇதிமுக கவுன்சிலரின் சரமாரியான அனல் பறந்த கேள்விகள்



மானாமதுரை பிப்28

சிவகங்கை வட்டம் மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் சாதாரண கூட்டம் நகரமன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி தலைமையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் துணைத்தலைவர் பாலசுந்தரம், நகராட்சி ஆணையாளர், பொறியாளர், நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் ஆரம்பித்த பின்னர் (அஇஅதிமுக )3வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் கங்கா தேவகுமார் பேசுகையில் மானாமதுரை நகராட்சி நிர்வாகம் மெத்தனப்போக்காக செயல்படுவது ஏன் ? என்ற கேள்வி எழுப்பினார் பின்னர் நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் அனைத்தும் ஆமை வேகத்தில் நடைபெறுவதாகவும் நகர் பகுதியில் சுற்றி தெரியும் தெரு நாய்களை கட்டுப்படுத்தாத காரணத்தினால் ராஜகம்பீரம் பகுதியில் 20ற்கும் மேற்பட்டோர் மீது தெருநாய் கடிக்கு உள்ளானதை சுட்டி காட்டினார். மேலும் இரவு நேரத்தில் மானாமதுரை அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததால் நோயாளிகள் அவதியடைவதையும் குறிப்பிட்டார். நகர் மன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அரங்கமே அதிர்ந்து போனது திமுக உறுப்பினர்களும் தங்களது பங்கிற்கு கேள்விகளை சரமாரியாக எழுப்பினர். அனல் பறக்கும் கேள்விகளால் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் அதிகாரிகளும் நிர்வாகத்தினரும் திகைத்து நின்றனர் .இக்கூட்டத்திற்கு பின்னர் ஆவது மானாமதுரை மருத்துவமனைக்கு நிரந்தரமாக இரவு மருத்துவர் மருத்துவர் பற்றாக்குறை போன்றவைகளுக்கு விடிவுகாலம் பிறக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# கடலூர் மாரியம்மன் கோயிலில் பொருளாதார முறைகேடு



கடலூர் பிப்28

கடலூர் மாவட்டம் திருப்பணாம்பக்கம் ஆதித்திராவிடர் பகுதியை சேர்ந்த மாரியம்மன் கோயிலில் பொருளாதார முறைகேடு நடந்துள்ளதாக கூறப்படுகிறது

மேலும் 17.2.2025 திங்கள் கிழமை அன்று மாலை 8:00 மணியளவில் சுமார் 46 லட்சம் திருப்பணாம்பக்கம் பகுதியில் உள்ள வேப்ப மரத்தடியில் கைமாறியுள்ளது. இதில் அங்கீகரிக்கப்படாத சட்டவிரோத நாட்டாமை என்ற பெயரில் உள்ள 1. அமரன், 2. வேலாயுதம், 3. குணசீலன், 4. வேலு, 5. பாலமுருகன், 6. தினேஷ், 7. ஐயப்பன், 8. விஜி, 9. அன்பழகன் மற்றும் வீர பிரகாஷ் இவர்கள் 10 பேரும் தலா 4 லட்சம் வீதம் 46 லட்சத்தில் உள்ள 40 லட்சத்தை 48% P.A. வட்டி விகிதத்தில் பிரித்து எடுத்துக் கொண்டு மேலும் அதை கந்து வட்டிக்கு (சுமார் 100%) விட்டு மக்களை மன உலைச்சலுக்கு ஆளாக்கி வேதனையும் துன்பத்தையும் கொடுத்து மன உளைச்சலுக்கு கொண்டு சென்று தற்கொலைக்கு உள்ளாக்கியுள்ளார்கள். தங்கள் சுயநலத்துக்காகவும் சுகத்துக்காகவும் திட்டத்தை தீட்டி பல ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். இது ஒரு மிக பெரிய பொருளாதாரக் குற்றமாகும். மேலும் மக்களின் வளர்ச்சியையும் நாட்டின் வளர்ச்சியையும் சீர்குலையச் செய்கிறது. திருப்பணாம்பக்கம் கிராமம் ரெட்டி சாவடி குருவட்டம், தூக்கணாம்பாக்கம் காவல் நிலையம் எல்லை பகுதிக்கு உட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பொரு ளாதாரக் குற்ற பிரிவு இதை suo moto வாக எடுத்து கண்காணித்து நடவடிக்கை எடுத்து 40 லட்சத்தை பரிமுதல் செய்யுமா? இந்த சட்டவிரோத பண பரிமாற்றம் ஏற்ற தாழ்வை ஏற்படுத்தியதோடு பல சட்ட விரோத செயல்களுக்கு ஏதுவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. முறைகேடு செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை பாயுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 58வது வார்டு நேரு நெடுஞ் சாலையில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தை மறு சீரமைப்புக்கு 9.5லட்சம் செலவில் நேற்று பூமி பூஜை 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் கலந்து கொண்டு பூமி பூஜை நடைபெற்றது உடன் மாமன்ற உறுப்பினர் மதுமிதா மோகன், பி.புகழேந்தி, வட்ட செயலாளர் ஐசக் வட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகளுக்கென கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் ,மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் மற்றும் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரம் ஆகியோர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் 202425 மூலம் தலா ரூ.01.00 கோடி வீதம் மொத்தம் ரூ.02.00 கோடி மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் கீழ் அடிக்கல் நாட்டும் பணியினை நேற்று துவக்கி வைக்கப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத், சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்

# தேசிய பசுமை படை சார்பாக சிவகங்கையில் சுற்றுச்சூழல் குறித்த ரங்கோலி போட்டி





சிவகங்கை, பிப்.28

தேசிய பசுமைப் படை சார்பாக ரங்கோலி போட்டியானது சிவகங்கை மன்னர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. விழாவிற்கு தேசிய பசுமைப் படை சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ தலைமை வகித்தார். சொக்கநாதபுரம் தலைமை ஆசிரியர் புகழேந்தி வரவேற்புரை ஆற்றினார். சிவகங்கை ஒன்றியத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும், மெட்ரிக் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவ மாணவிகள் சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வுக்கான ரங்கோலி போட்டிகளில் கலந்து கொண்டார்கள். நடுவர்களாக ஓவியர்கள் செல்வம் செல்லப்பாண்டி அபிராமி சிறப்பாக பணியாற்றினார்கள். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என்ற தலைப்பில் ரங்கோலி கோலங்களை மாணவ மாணவிகள் தத்ரூபமாக வரைந்திருந்தனர்.

போட்டியில் பங்கேற்ற மாணவ மாணவிகளுக்கு தொப்பிகள் வழங்கப்பட்டது. ரங்கோலி போட்டியில் சிவகங்கை ஆலிஸ் மில்லர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதலிடத்தையும் சிவகங்கை புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி இரண்டாமிடத்தையும் ஏ. முறையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மூன்றாமிடத்தையும் பெற்று பரிசுகளை பெற்றனர். ஜெயங்கொண்டம் தலைமையாசிரியர் கென்னடி பீர்கலைக்காடு தலைமை ஆசிரியர் ராஜேந்திரன் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி வாழ்த்துரை வழங்கினர். மன்னர் மேல்நிலைப் பள்ளி உடற்கல்வி ஆசிரியர் இஞ்ஞாசிமுத்து மற்றும் ஆசிரியர்கள் போட்டிக்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.





சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக அனைத்து கல்லூரிகளுக்கு இடையிலான பூப்பந்தாட்ட (Ball Badminton) போட்டியில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி மாணவர்கள் அணி வெற்றி பெற்றனர். காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அழகப்பா பல்கலைக்கழக அனைத்து கல்லூரிகளுக்கு இடையிலான ஆடவர் மற்றும் பெண்களுக்குக் கான பூப்பந்துப் போட்டியில் அழகப்பா அரசு கலைக் கல்லூரி ஆடவர் அணியினர் இரண்டாவது இடத்திற்கான கோப்பையையும் , பெண்கள் அணியினர் மூன்றாவது இடத்திற்கான கோப்பையும் வென்றார்கள், வெற்றி பெற்ற அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவர் மற்றும் மாணவி அணிகளை கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி , உடற்கல்வி இயக்குநர் அசோக்குமார் மற்றும் பேராசிரியர்கள் வாழ்த்தினர்



தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று தூத்துக்குடி விமான நிலையத்திற்கு தமிழக ஆளுநர் ஆர்.என் ரவி விமான நிலையத்திற்கு வந்தார் அவரை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் புத்தகம் கொடுத்து வரவேற்றார்..



கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஹனீஷ் சாப்ரா மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா தலைமையில் அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவில இரயில்வே நிலையம் இருளப்பபுரம் வழியாக மினி பேருந்துகள் இயக்கப்படவுள்ள சாலைகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உடன் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி, வட்டார போக்குவரத்து அலுவலர் சசி உட்பட பலர் உள்ளார்கள்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் வாகன சோதனை 2500 கிலோ ரேசன் அரிசி 2000 லிட்டர் மண்ணெண்ணெய் பறிமுதல்



கன்னியாகுமரி பிப்28

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் நடந்த வாகனச் சோதனைகளில் கேரளாவுக்கு கடத்தி செல்ல முயன்ற ரேசன் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் பறிமுதல் செய்யப்பட்டது.

இது குறித்த விபரம் வருமாறு.

தனி வட்டாட்சியர் அனிதா குமாரி தலைமையில் தனி வருவாய் ஆய்வாளருடன் இணைந்து விளவங்கோடு வட்டம் அருமனை குஞ்சாலு விளை பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த போது அந்த வழியாக சந்தேகத்திற்கிடமான வகையில் வந்த சுமோ வாகனத்தை வழிமறித்து சோதனை செய்தபோது இருக்கைகளை மாற்றி ரகசிய அறைகள் அமைத்து நூதன முறையில் 1500 கிலோ ரேசன் அரிசி பதுக்கி வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் வாகனத்தை ஒட்டி வந்த ஓட்டுனர் வாகனதை நிறுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டார்.

இது போல் நேற்று நள்ளிரவு தனி வட்டாட்சியர் பறக்கும் படை (பொ) அனிதாகுமாரி தலைமையில் . துணை வட்டாட்சியர் பறக்கும் படை (பொ) சுனில்குமார், தனி வருவாய் ஆய்வாளர் மற்றும் ஓட்டுனர் சுரேஷ் ஆகியோர் வில்லுக்குறி பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த போது அந்த வழியாக வேகமாக வந்த கேரள பதிவு எண் கொண்ட சொகுசு கார் ஒன்றினை சந்தேகத்தின் பேரில் நிறுத்த முற்பட்ட போது நிறுத்தாமல் சென்றுள்ளது. அந்த வாகனத்தை பின்னால் தூரத்தி சென்று தக்கலை அரசு மருத்துவமனை அருகே வைத்து வழிமறித்த போது காரை நிறுத்தி விட்டு ஒட்டுனர் தப்பி ஓடிவிட்டார். பின்னர் வாகனத்தை சோதனை செய்த போது வாகனத்தின் பின்பக்கம் சுமார் 1000 கிலோ ரேசன் அரிசி கண்டெடுக்கப்பட்டது.

அதுபோல் நேற்று அதிகாலை மணவாளக்குறிச்சி பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுப்பட்டிருந்த போது அந்த வழியாக வேகமாக வந்த கேரள பதிவு எண் கொண்ட பிக்கப் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்ட போது அந்த வாகனத்தை ஓட்டுனர் நிறுத்தி விட்டு தப்பி ஓடி விட்டார். பின்னர் வாகனத்தை சோதனை செய்த போது. 50 கேன்களில் சுமார் 2000 லிட்டர் மீனவர்களின் படகுகளுக்கு பயன்படுத்தப்படும் மானிய விலை வெள்ளை நிற மண்ணெண்ணெய் தார்பாய் போட்டு மறைத்து வைக்கப்படிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கடத்தியவர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். கடத்தல் வாகனத்தை கண்டுபிடித்த தனி வட்டாட்சியர் அனிதா குமாரி.துணை வட்டாட்சியர் பறக்கும் படை சுனில் குமார். அவர்களை பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் பாராட்டினார்கள்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161